*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*27 10 2025 MONDAY 12 40 PM*
*வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *சர்தார் பட்டேலின் பிறந்த நாளையொட்டி, வரும் 31ஆம் தேதி நடைபெறவுள்ள ஒற்றுமை ஓட்டத்தில் மக்கள் அனைவரும் பங்கேற்குமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.*
- *Chhat பண்டிகையை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*
- *ஊழல் தடுப்பு வாரத்தை ஒட்டி, மத்திய அரசு அலுவலகங்களில் இன்று உறுதிமொழி ஏற்கப்பட்டது.*
- *79வது காலாட்படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.*
- *வங்கக் கடலில் உருவான Montha புயல், ஆந்திர மாநிலம், காக்கிநாடா அருகே, நாளை மாலை கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-வது பிறந்த நாளையொட்டி, வரும் 31ஆம் தேதி நாடுமுழுவதும் நடைபெறவுள்ள ஒற்றுமை ஓட்டத்தில் மக்கள் பெருமளவில் பங்கேற்குமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.*

*இதுகுறித்து பிரதமர் இன்று விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில், ஒருங்கிணைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான சர்தார் வல்லபாய் பட்டேலின் தொலைநோக்கு சிந்தனையை நனவாக்க நாம் அனைவரும் செயல்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*Chhat பண்டிகையை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.*

*சமூகவலைதளத்தில் அவர் இன்று வெளியிட்டுள்ள செய்தியில், சூரியபகவானையும், Chhathi Madha-வையும் வணங்கும் வகையில் இந்த பண்டிகை கொண்டாடப்படுவதாக கூறியுள்ளார்.*

இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் இந்த விழாவின் போது, அனைவரின் வாழ்விலும் வளமும், நலமும் கிடைக்கட்டும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசுத்துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில், சமூக ஒற்றுமை, ஆன்மிக ஆற்றல், இயற்கையை வணங்குவதற்கு *Chhat* பண்டிகை எடுத்துக்காட்டாக உள்ளதாக கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், மகிழ்ச்சியுடனும், ஆர்வத்துடனும் *Chhat* பண்டிகையை மக்கள் கொண்டாடி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, *Chhat* பண்டிகையின் மூன்றாம் நாளான இன்று, பீகார் மாநிலத்தில் ஏராளமான மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இன்று நிகழும் சூரிய அஸ்தமனத்தின் போது, *Gangai Gandak, Kosi, Bagmati* உள்ளிட்ட ஆற்றங்கரை ஓரங்களில் லட்சக்கணக்கானோர் கூடி, சூரிய பகவானை வழிபடவுள்ளனர்.

*Chhat* பண்டிகையை ஒட்டி நதியோரங்களில் அமைக்கப்பட்டுள்ள வழிபாட்டு தலங்களில் பீகார் சட்டப்பேரவை தேர்தல் குறித்த வாக்காளர் விழிப்புணர்வு பதாகைகளும் வைக்கப்பட்டுள்ளன.

>>>>>>><<<<<<<

மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், இன்று இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக பெல்ஜியம் செல்கிறார்.

தலைநகர் *Brussels*-ல் ஐரோப்பிய யூனியனின் வர்த்தக ஆணையர் திரு. *Marcos Sefcovic*-ஐ சந்தித்துப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தகம் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையே வர்த்தக பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த, ஐரோப்பிய யூனியன் வர்த்தக ஆணையருடன் திரு. பியூஷ் கோயல் பேச்சுவார்த்தை மேற்கொள்ளவுள்ளார்.

>>>>>>><<<<<<<

ஜம்மு, கத்துவா. சம்பா மாவட்ட சர்வதேச எல்லைப் பகுதிகளில் நிலம் கையகப்படுத்தியது தொடர்பாக, நில உரிமையாளர்களுக்கான இழப்பீடு தொகையை எல்லைப் பாதுகாப்புப் படை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த நிதி பெறப்பட்டுவிட்டதாக ஜம்மு மண்டல ஆணையர் திரு. ரமேஷ்குமார் தெரிவித்துள்ளதாகவும், உடனடியாக இழப்பீட்டு தொகை உரியவர்களுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச எல்லைப்பகுதிகளில் எல்லைப் பாதுகாப்பு படையின் கண்காணிப்பு மையங்களை அமைக்க நிலம் கையகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

>>>>>>><<<<<<<

உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாக தேர்வு செய்ய திரு. Surya Kant-ன் பெயரை தலைமை நீதிபதி திரு. B.R. Gavai மத்திய சட்ட அமைச்சகத்திற்கு பரிந்துரை செய்துள்ளார்.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. B.R. Gavai, அடுத்த மாதம் 24ஆம் தேதி ஓய்வு பெறுவதை அடுத்து, நீதிபதி திரு. Surya Kant-ன் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகளின் நியமனத்திற்கு முன்பாக, மத்திய சட்ட அமைச்சகம், தற்போதைய தலைமை நீதிபதியின் பரிந்துரையின் அடிப்படையில் அறிவிப்பது வழக்கமாக உள்ளது.

*திரு. Surya Kant உச்சநீதிமன்ற நீதிபதியாக கடந்த 2019ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*சத்திஷ்கட் மாநிலம், Kankar மாவட்டத்தில் 21 மாவோயிஸ்ட்கள் இன்று காவல்துறையினரிடம் சரணடைந்ததாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.*

*அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மாவோயிஸ்ட்கள் சரணடைவது அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் தேதிக்குள் நாட்டிலிருந்து நக்ஸல் தீவிரவாத்தை முற்றிலும் ஒழிப்பதற்கு வழிவகை செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*மாவோயிஸ்ட்டுகள் உடனடியாக காவல்துறையினரிடம் சரணடைய வேண்டும் என்று திரு. அமித் ஷா கேட்டுக் கொண்டுள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*உலக அளவில் இந்தியா கடல்சார் சக்தியாக உருவெடுத்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.*

*மும்பையில் இந்திய கடல்சார் வாரவிழாவை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இந்தியாவுக்கு ஏழாயிரத்து 500 கிலோமீட்டர் நீளம் கடற்கரை இருப்பதாக தெரிவித்தார்.*

*கடல்சார் துறையில் முதலீட்டாளர்கள் பயன்படுத்தி, கூடுதல் முதலீடு செய்ய வேண்டும் என்று திரு. அமித் ஷா கேட்டுக் கொண்டுள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*ஊழல் தடுப்பு வாரம் நாடுமுழுவதும் இன்று முதல் கடைபிடிக்கப்படுகிறது.*

*“ஊழல் தடுப்பு நமது கடமை” என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.*

*புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய ஊழல் தடுப்பு ஆணையர் திரு. பிரவின்குமார் ஸ்ரீவஸ்தவா, ஊழல் தடுப்பு உறுதிமொழியை செய்து வைத்தார்.*

சென்னை, அகிலஇந்திய வானொலி உள்ளிட்ட மத்திய அரசு அலுவலகங்களிலும் ஊழல் தடுப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

>>>>>>><<<<<<<

79வது காலாட்படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1947-ஆம் ஆண்டு இதே நாளில் கஷ்மீர் பள்ளத்தாக்கில் இந்திய ராணுவத்தின் காலாட்படை, எதிரிகளின் தாக்குதலை முறியடித்து, வெற்றி பெற்றதை குறிக்கும் வகையில் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, காலாட்படையின் தலைமை இயக்குநர் லெப்டினென்ட் ஜென்ரல் அஜய்குமார் விடுத்துள்ள செய்தியில், காலாட்படை வீரர்களுக்கும், ஓய்வுபெற்ற வீரர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பிற்காக எல்லைப்பகுதியில் காலாட்படை வீரர்கள் ஆற்றி வரும் தன்னலமற்ற சேவைகளை லெப்டினென்ட் ஜென்ரல் அஜய்குமார் பாராட்டியுள்ளார்.

>>>>>>><<<<<<<

இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளுக்கு இடையேயான உறவுகளை கொண்டாடும் வகையில் துபாயில் நிகழ்ச்சி நடைபெற்றது.

தீபாவளி பண்டிகையை கொண்டாடும் வகையில், பல்வேறு கலைநிகழ்ச்சிகளும், இந்திய உணவுத் திருவிழாவும் இதில் இடம்பெற்றன.

இந்நிகழ்ச்சியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக ஐக்கிய அரபு எமிரேட் அரசு தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள Montha புயல், நாளை காலை தீவிரப் புயலாக வலுப்பெற்று, ஆந்திர மாநிலம், காக்கிநாடா அருகே, நாளை மாலை அல்லது இரவு கரையைக்

கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரை 47 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

சென்னை ஓபன் மகளிர் டென்னிஸ் போட்டி இன்று தொடங்குகிறது.

இன்று நடைபெறவுள்ள ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் இந்திய வீராங்கனை மாயா ரேவதி ராஜேஸ்வரன் - Bhamidipaty-யையும், Srivalli Yamlapalli - இந்தோனேஷியாவின் Nugroho-யும், வைஷ்ணவி அட்கர் - குரோஷியாவின் Donna Vekic-ஐயும் எதிர்கொள்கின்றனர்.

வரும் 2ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

>>>>>>><<<<<<<

இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி கான்பராவில் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

இரு அணிகளுக்கு இடையேயான இரண்டாவது போட்டி மெல்பேர்னில் வரும் 31ஆம் தேதியும். 3வது போட்டி Hobart-ல் வரும் 2ஆம் தேதியும், நான்காவது போட்டி Gold Coast-ல் அடுத்த மாதம் 6ஆம் தேதியும், ஐந்தாவது மற்றும் இறுதிப்போட்டி பிரிஸ்பேனில் அடுத்த மாதம் 8ஆம் தேதியும் நடைபெறவுள்ளன.

>>>>>>><<<<<<<